# அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்

## (அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயில்)

## பெசன்ட் நகர், சென்னை– 90

போன் : 2446 6777, 2491 7777

## பொங்கல் திருவிழா –
## ஆண்டாள் திருக்கல்யாண உற்சவம்
## செய்திக்குறிப்பு

"அஷ்டலட்சுமி திருக்கோயில் " எனப் பொதுவாக வழங்கும் இந்த திருக்கோயில் இந்த நூற்றாண்டின் திருக்கோயில் கட்டிடக் கலையின் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாக உள்ளது.

வங்கக் கடற்கரை ஓரம் தாமரை ஒன்று மலர்ந்தாற் போல் அமைக்கப்பட்டுள்ளது. அடிப்பீடம் 64 கோணங்களில் அமைக்கப்பட்டு அதன் மீது மகாமேருவை அமைத்தால் போல் விமான அமைப்பு உள்ளது.

"அஷ்டாங்க விமானம்" என்னும் பழமையான திருமால் கோயில்களுக்கு உண்டான இரட்டை அடுக்கு முறையில் விதிகளுக்கு உட்பட்டு, அமைக்கப்பட்டுள்ளது. பஞ்சாட்சர ஆகம பூஜை நடைபெறும் இத்திருக்கோயில் திருமாலும், திருமாமகளும் திருமணக்கோலத்தில் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் காட்சி தருகின்றனர். பிற பக்கங்களில் ஆதி, தான்ய, தைரிய இலட்சுமி சன்னதிகள் உள்ளன. முதல் தளத்தில் கஜலட்சுமி, சந்தானலட்சுமி, விஜய லட்சுமி, வித்யா லட்சுமி சன்னதிகளும், இரண்டாம் தளத்தில் தனலட்சுமியும் அமர்ந்து அருள் புரிகின்றனர்.

தமிழகத்தில் எங்கும் காணக்கிடைக்காத வகையில் திருமாலின் பத்து அவதாரங்களும் தனியாக ஒரு சன்னதியில் ஒருங்கே எழுந்தருளியுள்ளனர்.

கமலவிநாயகர், குருவாயூரப்பன், ஸ்ரீசக்கரத்தாழ்வார், அனுக்கிரக ஆஞ்சநேயர், மருத்துவக் கடவுள் தன்வந்திரி ஆகியோர் அமர்ந்து அருளும் தலம்.

இத்திருத்தலம் பிரார்த்தனைகள் செலுத்தும் பிரார்த்தனைத் தலமாகவும், பரிகாரத் திருத்தலமாகவும் திருமணம் கைகூடும் திருமணத் தலமாகவும் விளங்குகிறது.

பக்தர்களின் வசதிக்காக நுழைவு வாயிலுக்கு முன்புறம் இருந்தே 'கியூ' வரிசைகள் அமைக்கப்பட்டு. நிழல் வசதியும், இளைப்பாறி கியூ வரிசையில் செல்ல வசதியும் செய்யப்பட்டுள்ளது.

கட்டணமில்லா சேவையும், கட்டணச் சேவையும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிலட்சுமி முதல் அனைத்து லட்சுமி சந்நிதிகளிலும் அந்தந்தச் சந்நிதிகளுக்குரிய சிறப்போடு அலங்காரங்களும் செய்யப்பட உள்ளன. அஷ்டலட்சுமிகளையும் தரிசனம் செய்தபிறகே மற்ற சன்னதிகளை தரிசிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலவசப் பிரசாதம் வழங்கவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குடிப்பதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பக்தர்கள் நலன் கருதி தகரஷீட் பந்தல், கியூ வரிசையில் செல்லவும், பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை செய்யப்பட்டுள்ளன.

13.01.2018 மாலை 6.30 மணிக்கு ஆண்டாள் திருக்கல்யாண உற்சவம்

14.01.2018 சிறப்பு அபிஷேகம், அலங்காரம் – சிறப்பு அன்னதானம்

16.01.2018 காணும் பொங்கல் – சிறப்பு அபிஷேகம், அலங்காரம் – சிறப்பு அன்னதானம்

பக்தர்கள், "தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக" என்பதற்கேற்ப, மற்றவர்கள் தரிசனம் செய்வதற்கு இடையூறு செய்யாவண்ணம் தரிசனம் செய்ய ஒத்துழைக்குமாறும், திருக்கோயில் நிர்வாகத்திற்குப் பூரண ஒத்துழைப்பு நல்கிடுமாறும் கனிவுடன் வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| எஸ். மதனகோபால், எம்.ஏ., பி.எல்., எம்.பில்., | மு. ஜோதி லட்சுமி, எம்.ஏ., பி.எல்., |
| செயல் அலுவலர் | தக்கார் / உதவி ஆணையர் |